381

381
2-57

# கர்னாடக சங்கீதத்தில் சுலப முறைகள்

# EASY METHODS IN CARNATIC MUSIC

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAY 1957
MADRAS

By
S. SARAVANABAVAN
MAYURAM

0.50 nP.

NR
N57
67915

381
2-57

# கர்னாடக
# சங்கீதத்தில் சுலப முறைகள்

# EASY METHODS IN CARNATIC MUSIC

By

S. SARAVANABAVAN
MAYURAM

Dedicated to the memory of
my beloved father late **Sri. K. Sivasubramania Iyer**,
Assistant of Municipal High School, Mayuram.

---

காலஞ் சென்ற எனது தகப்பனார்
**ஸ்ரீ K. சிவசுப்ரமணிய அய்யர்**
அவர்களுடைய ஞாபகார்த்த வெளியீடு.

67915

# FORE-WORD

Mr. S. Saravanabavan's Sruti Bheda conundrums can afford keen intellectual pleasure to those well-versed in the twelve-sruti scheme and the Ragalakshanas based on the distribution of the swaras over the srutis. Sruti Bheda singing is a practice reserved for seasoned experts as it is beset with great risks of bathetic derailment. But Sruti Bheda in theoritical thinking is a pleasant though a bit taxing intellectual exercise. With the help of a harmonium, an eager student of music can arrive at same conclusions as Mr. Saravanabavan. But the originality of Saravanabavan consists in the discovery that the deduction of a constant number takes us to the solution. He has tried to apply his method to problems whimsically varied in form and proved the validity of his principle in them all.

His third and last process which exploits the astrological dialect for the elucidation of his theory is pictorial so-to-say and very much more easy to follow. But it is capable of further investigation and expansion which I trust he will do in another paper later on. I commend to thinkers on musical problems this pamphlet as one calculated to give them an intellectual treat for a while and food for further investigation on the same lines ad infinitum.

Y. MAHALINGA SASTRIGAL,

M. A., B. L.,

# FORE-WORD

Mr. S. Saravanabavan's Sruti Bheda conundrums can afford keen intellectual pleasure to those well-versed in the twelve-sruti scheme and the Ragalakshanas based on the distribution of the swaras over the srutis. Sruti Bheda singing is a practice reserved for seasoned experts as it is beset with great risks of bathetic derailment. But Sruti Bheda in theoritical thinking is a pleasant though a bit taxing intellectual exercise. With the help of a harmonium, an eager student of music can arrive at same conclusions as Mr Saravanabavan. But the originality of Saravanabavan consists in the discovery that the deduction of a constant number takes us to the solution. He has tried to apply his method to problems whimsically varied in form and proved the validity of his principle in them all.

His third and last process which exploits the astrological dialect for the elucidation of his theory is pictorial so-to-say and very much more easy to follow. But it is capable of further investigation and expansion which I trust he will do in another paper later on. I commend to thinkers on musical problems this pamphlet as one calculated to give them an intellectual treat for a while and food for further investigation on the same lines ad infinitum.

Y. MAHALINGA SASTRIGAL
M.A., B.L.

## ஆதரவுக்கடிதங்கள்

"இந்த ஸங்கீத ஆராய்ச்சிக்கட்டுரை, எண்க ளுடன் ஸ்வரஸ்தானங்களை சம்பந்தப்படுத்தி, சாதுர் யமாக சுலபமுறையில் சுருதி பேத ராகஸ்வரங்களைக் கண்டு கொள்ளும் முறையில் அமைந்துள்ளது. இதைக் கண்டு பிடித்து எழுதிய மாயூரம் ஸ்ரீ S. சரவணபவன் அவர்களை நான் போற்று கின்றேன். மேலும் அவர் இதேபோல் ஆராய்ச்சிகள் செய்து பல சங்கீத நுட்பங்களை வெளியிடுவார் என நம்புகிறேன்."

"கந்தர்வகான" மாயூரம் S. ராஜம்

இச்சுலப கணித முறை ஸங்கீதத்தில் ஈடுபட்டி ருக்கும் ஒவ்வொருவருக்கும் மிக உபயோகமானதோர் இலகுவான முறையே. இதைச்சாமர்த்தியமாக கண்டு பிடித்த மாயூரம் ஸ்ரீ S. சரவணபவன் சங்கீத வித்வான்கள் எல்லோராலும் புகழப்படக் கூடியவரே. அவரை சங்கீத வித்வான்கள் ஆர்வமூட்டின் அவர் பல அரிய சங்கீத சாதனைகளைச் செய்வார் என்பதே என் நம்பிக்கை. அவருக்கு என் பாராட்டுகள் உரித் தாகுக."

"நாதஸ்வர இசையரசு"

வேதாரண்யம் V. G. வேதமூர்த்தி

"மாயூரம் ஸ்ரீ S. சரவணபவன் எழுதியுள்ள இச் சங்கீத ஆராய்ச்சி முறை மிகச்சுலப முறையில் அறிந்து கொள்வதற்கேற்ப அமைந்துள்ளது. இதை மிகச்சாமர்த்தியமாகக் கண்டு பிடித்து சுலப முறை யில் வெளியிட்டுள்ள அவருக்கு எனது பாராட்டுகள்."

"பிடில் வித்வான்" T. S. சம்பந்தம் பிள்ளை

# கர்னாடக சங்கீதத்தில் சுலப முறைகள்

—★—

## முன்னுரை

கர்னாடக சங்கீதம் கணக்கற்ற ஆண்டுகளாக, குன்றாச்சிறப்புடன் விளங்குவதன் பெருமை, இத் தெய்வீகக் கலையை கணித முறைக்கேற்ப அமைத்து, நமக்கு ஒரு பாதை வகுத்துத் தந்த கர்னாடக வித்வான்களையே சாரும் எனலாம். மேளகர்த்தா ராகங்களின் அமைப்பே இதற்கோர் சான்றாகும். புராதன நாட்களில் பிரகாசித்த வித்வான்கள் சங்கீத நுட்பங்கள் பலவற்றை அறிந்திருந்தும் உலகிற்கு அவைகளை வெளியிட்டுத் தரும் வசதிகள் இல்லாமல் இருந்திருக்கிறார்கள். இந்த நாட்களிலோ புதிய விஷயங்களை ஆராயத்தகுந்த நிலையங்களும், கண்டு பிடித்த விஷயங்களை பிரசுர மூலம் விளம்பரம் செய்யும் அச்சுக்கூடங்களும், பத்திரிகாலயங்களும் பல உள்ளன. ஆராய்ந்து கூறின், நாம் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கும் ஒவ்வொரு விஷயமும் புராதன வித்வான்களால் கண்டு பிடிக்கப்பட்டு, கையாளப்பட்டு வசதிக் குறைவின் காரண வசத்தினால் அவர்களுடனேயே மறைந்த பழைய விஷயங்களாக இருக்கலாம். உதாரணமாக, இப்புத்தக மூலம் நான் வெளியிடும் சுலப முறைகள் என் சொந்த முயற்சியினால் கண்டு பிடித்த புதிய முறைகள் எனினும், புராதன நாட்களில் ஒரு குறிப்பிட்ட ராகத்தை

வெகு நேரம் கையாளும் திறன் வாய்ந்த சங்கீத வித்வான்களால் உபயோகப்படுத்தப்பட்ட முறைகளின் பல அம்சங்கள் பொருந்தியதாக இருக்கலாம். ஏனெனில் அவர்கள் ஒரு ஸம்பூர்ண ராகத்தைப் பாடும் பொழுது, ரிஷபக் கிராமம், காந்தாரக் கிராமம், மத்யமக் கிராமம் எனப்படும் ரிஷப, காந்தார, மத்யம ஸ்வர ஸ்தானங்களில் நின்று கொண்டு, வெகு நேரம் பாடுவார்கள் என நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்விதமாக அந்தந்த ஸ்தானத்தில் நின்று பாடும் பொழுது, அந்த குறிப்பிட்ட ஆதி ராகமானது வெவ்வேறு ராகமாக த்வனிக்கும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளாமல் இருந்திருக்க முடியாது. நான் இப்புத்தக மூலமாக வெளியிட்டிருக்கும் சுலப முறைகளின் கருத்தும், அவ்விதமான ராக பேதங்களை அறிவதற்கேயாகும். இதற்கு சங்கீத வித்வான்களுடையவும், ரஸிகர்களுடையவும், சங்கீதாபிமானிகளுடையவும் மேலான ஆதரவு கிடைக்கும் என நம்புகிறேன். சங்கீத சாஸ்திரத்திற்கு உருவளித்த கர்னாடக வித்வான்களுக்கும் இக்கலையில் என்னை ஈடு பாடுள்ளவனாகச் செய்த சங்கீத ஆசிரியர் மாயூரம் ஹார்மோனியம் ஸ்ரீ S. S. மணி அய்யர் அவர்களுக்கும், சாஸ்திர ஞானிகளுக்கும் என் பணிவான வணக்கங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இம்முறைகளின் ஒரு சில பகுதிகளை பிரசுரம் செய்த "அமுத சுரபி" ஆசிரியருக்கும், இதற்கு ஆதரவளித்த சங்கீத வித்வான்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

2, வடக்கு ராமலிங்க முதலி அக்கிரஹாரம் } மாயூரம் S. சரவணபவன் (ஆக்கியோன்)

# முறைகளின் கருத்து

நாம் ஒரு ராகத்தைப் பாடிக் கொண்டிருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட ஸ்வரஸ்தானத்தில் நின்று கொண்டு அதை ஆதார ஸட்ஜமமாக பாவித்துப் பாடினேமானல், நாம் பாடிக்கொண்டிருந்த ஆதி ராகமானது வேறு ராகமாக த்வனிக்கின்றது. சுலபமாக அப்பேத ராகத்தைக் கண்டு பிடிப்பதற்கென்றே இம்முறைகளை உருவாக்கியுள்ளேன்.

# 1. கணித முறை

## ஸ்வரங்களும் அவைகளுக்குறிய எண்களும்

| ஸ்வரங்கள் | எண்கள் |
|---|---|
| ஸட்ஜமம் | 1 |
| சுத்தரிஷபம் | 2 |
| சதுசுருதிரிஷபம் & சுத்தகாந்தாரம் | 3 |
| சாதாரணகாந்தாரம் & ஷட்சுருதிரிஷபம் | 4 |
| அந்தரகாந்தாரம் | 5 |
| சுத்தமத்யமம் | 6 |
| பிரதிமத்யமம் | 7 |
| பஞ்சமம் | 8 |
| சுத்ததைவதம் | 9 |
| சதுசுருதிதைவதம் & சுத்தநிஷாதம் | 10 |
| கைசிகநிஷாதம் & ஷட்சுருதிதைவதம் | 11 |
| காகலி நிஷாதம் | 12 |

குறிப்புகள்:— 1. மேற்காணும் ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் எதிரில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண் (1லிருந்து 12வரை) இக்கணித முறையில் உபயோகமாகும் முக்கிய எண்களாகும்.

2. ஒரே எண் இரட்டை ஸ்வரங்களைக் குறிப்பதாகக் கண்டு இருப்பது அவ்விரு ஸ்வரங்களும் ஒரே ஸ்தானத்தில் அமைகிறது என்பதைக் குறிக்கின்றது. அவசியமானலின்றி, முதலில் குறிப்பிட்டிருக்கும் ஸ்வரத்தையே கொள்ளவும்.

3. ஒவ்வொரு எண்ணிற்கும் அதனதற்கு அடுத்துள்ள எண்ணிற்கும் உள்ள வித்யாசம் 1/2 ஸ்வரமாகும்.

**உதாரணம்** (a):— "சுத்ததன்யாசி" ராகத்தின் காந்தாரஸ்வரத்தை ஆதார ஸட்ஜமமாக பாவித்து பாடினல் அதில் எந்த ராகம் த்வனிக்கும்?

முறை:— "சுத்ததன்யாசி" ராகக்கிரமம் =

ஆரோகணம்:— ஸகமபநிஸ
அவரோகணம்:— ஸநிபமகஸ (8)

இதில் உள்ள ஸ்வரங்களும் அவைகளுக்குறிய எண்களுமாவன:—

| | | |
|---|---|---|
| ஸட்ஜமம் | = | எண் 1 |
| சாதாரணகாந்தாரம் | = | எண் 4 |
| சுத்தமத்யமம் | = | எண் 6 |

பஞ்சமம் = எண் 8
கைசிகநிஷாதம் — எண் 11
அதாவது எண் கிரமம் = 1-4-6-8-11-1
1-11-8-6-4-1

நாம் இந்த ராகத்தின் காந்தாரத்தை ஸட்ஜமமாகச் செய்யவேண்டும். **அதாவது எண் 4ஐ எண் 1 ஆகச் செய்யவேண்டும்.** அப்படிச் செய்ய எண் 3 (மூன்றை)ஐ கழிக்க வேண்டியிருக்கிறது அல்லவா? இம்மூன்றை (3ஐ) மற்ற ஸ்வர எண்களிலும் கழிப்பதால் ஏற்படும் ஸ்வர எண்கிரமமே, நமது விடை ராகக் கிரமமாகும். ஆதலால் 3ஐ கழித்து விடையைக் காணுவோம்:—

எண் — 4 = எண் 1 (ஆவதுடன்)
எண் — 6 = எண் 3 (ஆகும்)
எண் — 8 = எண் 5 ( ,, )
எண் – 11 = எண் 8 ( ,, )
எண் — 1 = எண் 10 ( ,, )*

* (1+12—3=10 கழிக்கும் எண் கழிக்கப்படும் எண்ணைவிட பெரியதானாலும், கழிக்கப்படும் எண்ணிற்கு சமமானாலும் கழிக்கப்படும் எண்ணுடன் 12ஐ (பனிரண்டை) கூட்டிக்கொண்டு பிறகு கழிக்கவும்.)

இப்போது நமக்கு கிடைத்திருக்கும் கிரமம்:—

1—3—5—8–10—1
1–10—8—5—3—1

(அ.து) ஸட்ஜமம், சதுசுருதிரிஷபம், அந்தர காந்தாரம், பஞ்சமம், சதுசுருதி தைவதம் ஆகியவை. இது "மோஹன" ராகத்தின் கிரம மாகும்.

(ஸரிகபதஸ—ஸதபகரிஸ—29)

**விடை:—** மோஹனம்

**உதாரணம் (b):—** "ஆரபி" ராகத்தின் ரிஷபத்தை ஸட்ஜமம் செய்தால் என்ன ராகம் கிடைக்கும்?

முறை:— "ஆரபி" ராகத்தின் கிரமம் =

{ ஆரோ:—ஸரிமபதஸ
{ அவரோ:—ஸநிதபமகரிஸ (29)

நமது முறைப்படி எண் கிரமம் =

{ ஆரோ:—1-3-6-8-10-1
{ அவரோ:—1-12-10-8-6-5-3-1

இதில் ரிஷபத்தை ஸட்ஜமம் செய்யவேண்டுமாதலால், எண் 3ஐ எண் 1 ஆக்கவேண்டும். இதில் கழிக்கும் எண் 2 (இரண்டு) இதை மற்ற ஸ்வர எண்களில் கழிக்க :—

| **ஆரோகணம்** | **அவரோகணம்** |
|---|---|
| 3 = 1 | 3 = 1 |
| 6 = 4 | 1 = 11 |

| ஆரோகணம் | அவரோகணம் |
|---|---|
| 8 = 6 | 12 = 10 |
| 10 = 8 | 10 = 8 |
| 1 = 11 | 8 = 6 |
| | 6 = 4 |
| | 5 = 3 |

அதாவது எண் கிரமம்.—

ஆரோ:- 1-4-6-8-11-1
அவரோ:- 1-11-10-8-6-4-3-1

ஸ்வரங்கள் :— ஆரோ :- ஸகமபநிஸ
அவரோ :- ஸநிதபமகரிஸ (22)

விடை :— "கர்னுடக தேவகாந்தாரி"

உதாரணம் (c) :— எந்தராகத்தின் மத்திய மத்தை ஸட்ஜமம் செய்தால் "கல்யாணி ராகம் கிடைக்கும் ?

முறை:— கேட்கப்பட்டிருக்கும் ராகத்தின் மத்யமானது, "கல்யாணி" ராகத்தின் ஸட்ஜமமாதலால், அதன் ஸட்ஜமம் "கல்யாணியின்" பஞ்சமமாகும் அல்லவா ?

ம = ஸ

( ம க ரி ஸ = ஸ நி த ப )

ஸ = ப

இதிலிருந்து "கல்யாணி"யின் பஞ்சமத்தை ஸட்ஜமம் செய்தால், கேட்க்கப்பட்டராகம் கிடைக்கும் என அறியலாம். "கல்யாணி"யின் பஞ்சமத்தை ஸட்ஜமம் செய்வோம் :—

கல்யாணி கிரமம்: ஆரோ:- ஸரிகமபதநிஸ
அவரோ:- ஸநிதபமகரிஸ (65)

எண் கிரமம்: ஆரோ:- 1-3-5-7-8-10-12-1
அவரோ:- 1-12-10-8-7-5-3-1

இதில் பஞ்சமத்தை ஸட்ஜமம் செய்யவேண்டுமாதலால், எண் 8ஐ எண் 1 ஆக்கவேண்டும். கழிக்கும் எண் 7 (ஏழு), இதை மற்ற எண்களில் கழிக்க:—

எண் 8— எண் 1 : எண் 10— எண் 3
எண் 12— எண் 5 : எண் 1— எண் 6
எண் 3— எண் 8 : எண் 5— எண் 10
எண் 7— எண் 12

விடைக்கிரமம்: ஆரோ:- 1-3-5-6-8-10-12-1
அவரோ:- 1-12-10-8-6-5-3-1
இது சம்பூர்ண ராகம் (மேளம் 29)

**விடை:** சங்கராபரணம்

உதாரணம் (d):— எந்தந்த ஸ்வரக் கோர்வைகளின் ரிஷபத்தை ஸட்ஜமம் செய்தால் "மோஹன" ராகம் கிடைக்கும்? அல்லது மோஹனத்தின் ஸட்ஜமத்தை (1) சுத்தரிஷபம் செய்தால் (2) சதுசுருதி ரிஷபம் செய்தால் என்ன ஸ்வரக் கோர்வை கிடைக்கும்?

**முறை:—** மோஹனம் நிஷாதவர்ஜ்ய ராகமாதலால், கேட்கப்பட்ட ஸ்வரக் கோர்வைகளில் ஸட்ஜமம் இருக்க முடியாது அல்லவா? இது உதாரணம் (c) யின்படி தீர்க்க முடியாது.

மோஹனக்கிரமம்: ஸரிகபதஸ-ஸதபகரிஸ

எண் கிரமம்: 1-3-5-8-10-1
1-10-8-5-3-1

இதில் ஸட்ஜமம், கேட்கப்பட்ட ஸ்வரக் கோர்வையின் ரிஷபம் ஆதலால், மோஹன ஸட்ஜமத்தை (1) சுத்தரிஷபமாகவோ (2) சதுசுருதிரிஷபமாகவோ செய்தால் விடை கிடைக்கும்.

(1) சுத்தரிஷபமாகச் செய்வதற்கு எண் 1ஐ எண் 2 ஆக்கவேண்டும், இதில் எண் 1ஐ கூட்டும்படி வருகிறது. இந்த கூட்டும் எண் 1ஐ மற்ற எண்களிலும் கூட்ட:—

எண் 1 — எண் 2 : எண் 3 — எண் 4
எண் 5 — எண் 6 : எண் 8 — எண் 9
எண் 10— எண் 11

ஆகையால் விடைக்கிரமம்:- 2-4-6-9-11-2
2-11-9-6-4-2

விடை ஸ்வரங்கள்:- ரிகமதநிரி-ரிநிதமகரி (8)
தோடியில் ஜன்யமானகோர்வை

(2) சதுசுருதி ரிஷபம் செய்தால், எண் 1 எண் 3 ஆகும். கூட்டும் எண் 2 இதை (2ஐ) மற்ற எண்களில் கூட்ட:—

எண் 1 — எண் 3 : எண் 3 — எண் 5
எண் 5 — எண் 7 : எண் 8 — எண் 10
எண் 10 — எண் 12

விடை எண்கிரமம்:- 3-5-7-10-12-3
3-12-10-7-5-3

67915

விடை ஸ்வரங்கள்:- ரிகமதநிரி-ரிநிதமகரி (65)
கல்யாணியில் ஜன்யமான கோர்வை

NR

இவ்வுதாரணத்தின் உபயோகத்தினுல் "தோடி" அல்லது "கல்யாணி" யின் ஸட்ஜம, பஞ்சமங்களை நீக்கி, ரிஷபத்தை ஆதார ஸட்ஜமமாக பாவித்து பாடிலுல், அதில் "மோஹனம்" த்வனிக்கும் என அறியலாம்.

உதாரணம் (e):— எந்தராகத்தின் ரிஷபத்தை ஸட்ஜமம் செய்வதனுல் ஏற்படும் ராகமும், "கல்யாணி"யின் நிஷாதத்தை ஸட்ஜமம் செய்வதால் ஏற்படும் ராகமும் ஒன்ருகும்?

முறை:— கேள்வியிலிருந்து, கல்யாணி"யின் நிஷாதமானது, கேட்கப்பட்டராகத்தின் ரிஷபமென்று தெரிகிறதல்லவா? ஆகையால் "கல்யாணியின்" தைவதமே கேட்கப்பட்ட ராகத்தின் ஸட்ஜமம் என உதாரணம் (c) யின்படி அறியலாம். இப்போது "கல்யாணி"யின் தைவதத்தை ஸட்ஜமம் செய்து விடையை அறிவோம்.

"கல்யாணி" கிரமம் ஸம்பூர்ணம் (65)

| | |
|---|---|
| எண் கிரமம்: | 1-3-5-7-8-10-12-1 |
| | 1-12-10-8-7-5-3-1 |

தைவதத்தை ஸட்ஜமம் செய்ய எண் 10 எண் 1 ஆகவேண்டும், கழிக்கும் எண் 9. 9ஐ மற்ற எண்களிலும் கழிக்க:—

எண் 10—எண் 1 : எண் 12—எண் 3
எண் 1—எண் 4 : எண் 3—எண் 6
எண் 5—எண் 8 : எண் 7—எண் 10
எண் 8—எண் 11

விடைக்கிரமம்: 1-3-4-6-8-10-11-1
1-11-10-8-6-4-3-1

ஸம்பூர்ணராகம் (மேளம் 22)

விடை: **கரகரப்ரியா**

**உதாரணம் (f):—** *''ஸிம்மேந்திர மத்யம'' த்தின் எந்த ஸ்வரத்தை ஸட்ஜமம் செய்தால், ''மாயா மாளவ கௌளை'' கிடைக்கும்?*

''ஸிம்மேந்திர மத்யமம்'' ஸம்பூர்ண ராகம்.

| | |
|---|---|
| எண் கிரமம்: | 1-3-4-7-8-9-12-1 |
| ஒரு எண்ணிற்கும் அதற்கடுத்த எண்ணிற்கும் உள்ள வித்யாசம் | 2 1 3 1 1 3 1 |
| ''மாயா மாளவ கௌளை'' கிரமம்: | 1-2-5-6-8-9-12-1 |
| வித்யாச எண்கள்: | 1 3 1 2 1 3 1 |

*''மாயா மாளவ கௌளை''யின் ஸட்ஜம எண்ணாகிய 1 க்கும் அதற்கடுத்த எண்ணிற்கும் உள்ள வித்தியாச எண்ணிலிருந்து தொடரும் வித்யாச எண்கள் (1-3-1-2-1-3-1) ஸிம்மேந்திர மத்யம'' த்தின்* பஞ்சம *எண் 8 லிருந்து தொடரும் வித்யாச எண்களுக்கு சமமாதலால் விடை:* **பஞ்சமம்**

**உதாரணம் (g):—** *''தோடி''யின் காந்தாரத்தை ஸட்ஜமம் செய்வதால் ஏற்படும் ராகத்தின் எந்த ஸ்வரத்தை ஸட்ஜமம் செய்தால் ''நடபைரவி'' கிடைக்கும்?*

| | |
|---|---|
| தோடி | 1-2-4-6-8-9-11-1 |
| வித்தியாசம் | 1 2 2 2 1 2 2 |

| | | |
|---|---|---|
| நடபைரவி | 1-3-4-6-8-9-11-1 |
| வித்தியாசம் | 2 1 2 2 1 2 2 |

''நடபைரவி''யின் ஸட்ஜமத்திலிருந்து தொடரும் வித்யாச எண்கள், ''தோடியின் மத்யமத்திலிருந்து தொடருகிறது. ''தோடி''யின் மத்யம எண்ணுகிய (6). ''தோடி''யின் காந்தார எண்ணுகிய (4)லிருந்து 3வது எண்ணுதலால். விடை: 3 (அ.து.) சதுசுருதி ரிஷபம்.

# 2. ஸப்தராக முறை

இம்முறை எண்கள் சம்பந்தமின்றி, ஒரு குறிப் பிட்ட ஏழு ராகங்களைக் கொண்டு கண்டு பிடிப்ப தாகும். அதாவது உதாரணமாக சங்கராபரணத் தையோ, அல்லது வேறொரு ராகத்தையோ எடுத்துக் கொண்டு, அதன் ரிஷப, காந்தார, மத்யம, பஞ்சம, தைவத, நிஷாதங்களை ஸட்ஜமம் செய்வதால் ஏற்படும் ராகங்களை ஞாபகம் வைத்துக்கொண்டு கண்டு பிடிக்க வேண்டும். இம்முறை உதாரணமாக "சங்கரா பரண"த்தில் ஜன்யமாகும் ஒரு ராகத்தின் மத்ய மத்தை ஸட்ஜமம் செய்தால், அது "கல்யாணி" ராக ஜன்யமாகத்தான் இருக்க வேண்டும் என்றும், சங் கராபரணத்தில் நிஷாதம் அசைந்தால், அது கல் யாணியின் மத்யமத்தை பாதிக்கும் என்பதைப் போன்ற சில நியதிகளின் அடிப்படையைக் கொண் டது. இது மற்றிரு முறைகளையும் விட சுலபமல்ல. ஆகையால் இதை விஸ்தரிக்க விரும்பவில்லை.

# 3. சோதிட முறை

இம்முறையை விளக்குமுன், சங்கீத சாஸ்திரமும், சோதிட சாஸ்திரமும், ஒற்றுமைப்படும் சில இடங்களை ஆராய்வோம்.

(1) சோதிடத்தில் இரண்டாவது ராசி =ரிஷபம்.

சங்கீதத்தில் இரண்டாவது ஸ்வரமும் அதே.

(2) சோதிடத்தில் ராசிகள் -12

சங்கீதத்தில் பேதஸ்வரங்கள் -12

(3) சோதிடத்தில் (ராகு, கேது - சாயாக்ரகங்களை நீக்கி மிகுதியுள்ள) கிரகங்கள் -7

சங்கீதத்தில் ஸப்த ஸ்வரங்கள் -7

(4) சோதிடத்தில் மேஷராசி (1)ம் விருச்சிகராசியும் (8ம்) அங்காரக க்ஷேத்ர

மாகும். குஜன்:- தேஜஸ் சங்கீதத்தில் ஸட்ஜமமும் (1ம்) பஞ்சமும் (5ம்) கர்த் தாராகங்களுக்கு தேஜஸ்ஸை அளிக் கும் ஸ்வரங்கள் ஆகும்.

(5) சோதிடத்தில் சூரியன் சந்திரன் இவர் களுக்கு ஒவ்வொரு வீடுதான். மற்ற ஐந்து கிரகங்களுக்கும் இரண்டு இரண்டு வீடுகள்.

*சங்கீதத்தில் ஸட்ஜமம் பஞ்சமம் இவைகளுக்கு இரண்டாவது மாற்று ஸ்வர ஸ்தானம் கிடையாது. மற்ற ஐந்து ஸ்வரங்களுக்கும் உண்டு. (சுத்தமத்தி யமம், பிரதிமத்திமம், சுத்தரிஷபம், சதுஸ்ருதிரிஷபம் போன்றவை)*

(6) சோதிடத்தில் சூரியன் சந்திரன் இவர் களுக்கு வக்கிர கதி கிடையாது. மற்ற கிரகங்களுக்கு உண்டு. சங்கீதத் தில் ஸட்ஜம பஞ்சமங்கள் பேத மற்றவை. மற்ற ஸ்வரங்கள் பேத முள்ளன ஆகும்.

*இதே போன்ற பல ஒற்றுமைகளை, ஆராய்ச்சி செய்தால் கண்டு விடலாம்.*


## மூன்று சாஸ்திரங்களின் சம்மேளனம்

(Conjuction of the three arts, Astrology, Music and Mathematics)

| | | | |
|---|---|---|---|
| மீனம்<br>கா. நிஷாதம்<br>எண் 12 | மேஷம்<br>ஸட்ஜமம்<br>எண் 1 | ரிஷபம்<br>சு. ரிஷபம்<br>எண் 2 | மிதுனம்<br>சது. ரிஷபம்<br>சு. காந்தாரம்<br>எண் 3 |
| கும்பம்<br>கை. நிஷாதம்<br>ஷ. தைவதம்<br>எண் 11 | இவ்விராசிச் சக்கரத்தை<br>மனதில் கொள்ளவும் | | கடகம்<br>சா. காந்தாரம்<br>ஷ. ரிஷபம்<br>எண் 4 |
| மகரம்<br>சது. தைவதம்<br>சு. நிஷாதம்<br>எண் 10 | | | ஸிம்மம்<br>அ. காந்தாரம்<br>எண் 5 |
| தனுசு<br>சு. தைவதம்<br>எண் 9 | விருச்சிகம்<br>பஞ்சமம்<br>எண் 8 | துலாம்<br>பிரதி மத்யமம்<br>எண் 7 | கன்னி<br>சு. மத்யமம்<br>எண் 6 |

இப்போது நமது உதாரணம் (a)ஐ பரிசோதிப் போம். கேள்வி: "சுத்ததன்யாசியின்" காந்தாரத்தை ஸட்ஜமம் செய்தால் என்ன ராகம் கிடைக்கும்?

முக்கிய குறிப்புகள்:— பாடிக்கொண்டிருக்கும் ஆதி ராகத்தை ராசி சக்கிரத்தில் மேஷ ராசியிலிருந்து அடைக்கவேண்டும். சுருதிபேதம் (ஸட்ஜமமாக) செய்யும் ஸ்வரத்தை லக்னமாகக் கொள்ள வேண்டும். லக்கினத்தை ஒன்று என்றும், அதிலிருந்து எந்தெந்த ராசிகளில் ஸ்வரங்கள் உள்ளனவோ அந்த எண்களை கணக்கிட்டு 1 லிருந்து எழுதினால் அதுவே விடைக் கிரமமாகும்.





காந்தாரத்தை ஸட்ஜமம் செய்யவேண்டும். ஆகையால் லக்னம் = கடகம். இதிலிருந்து முறையே 1-3 5-8-10 ம் ராசிகளில் ஸ்வரங்களுள்ளன.

இதுவே விடையாகும்
(மோஹனம்)

— x —

உதாரணம் (c)ஐ ஆராய்வோம். "கல்யாணியின்" பஞ்சமத்தை ஸட்ஜம் செய்யவேண்டும்.




லக்னம்: விருச்சிகம். இதிலிருந்து முறையே 1-3-5-6-8-10-12 ராசிகளில் ஸ்வரங்களுள்ளன.

இதுவே விடையாகும்
(சங்கராபரணம்)

— x —

உதாரணம் (d)ஐ பரிசோதனை செய்வோம். மோஹனத்தின் ஸட்ஜமத்தை சதுசுருதி ரிஷபம் செய்தால் என்ன ஸ்வரக் கோர்வை கிடைக்கும்?

| | | | |
|---|---|---|---|
| | ஸ | | ரி |
| ல | மோஹன சக்கரம் ஸ=3 | | |
| த | | | க |
| | ப | | |

ஸ = 3 ஆகவேண்டுமாதலால் லக்னம் கும்பமாகும். இதிலிருந்து 3-5-7-10-12ம் ராசிகளில் ஸ்வரங்கள் உள்ளன.

இதுவே விடையாகும்
ரிகமதநி (65)

67915

# ஜாதக விளம்பரம்

## சார்ஜ் விபரம்

| | ரூ. அ. |
|---|---|
| ஜாதகம் கணிக்க ராசி, பாவ, நவாம்சம் பாகை, கலை விபரங்களுக்கு | 3—0 |
| உதய லக்னம் நிர்தாரணம் செய்ய | 5—0 |
| ஒரு வருஷ பலன்கள் | 5—0 |
| ஷை விபரமாக | 10—0 |
| ஒரு திசையின் பலன்கள் | 7—8 |
| ஒரு பாவ பலன் சொல்ல | 7—8 |
| ஆயுர்தாயம் | 7—8 |
| பொருத்தம் (விவாகம்) | |
| ஒரு ஜாதகத்திற்கு மூன்று ஜாதகங்கள் வரை பார்த்து சொல்வதற்கு | 5—0 |

பிறந்த காலம், தேதி, இடம் அனுப்பவும். முன் பணம் அவசியம். V.P.P. இல் அனுப்புவதில்லை. 2 வாரங்களுக்குள் வேலை முடித்து அனுப்பப்படும். தமிழ், அல்லது ஆங்கிலத்தில் தயார் செய்து அனுப்பப்படும்.

**S. சரவணபவன்**

(Son of K சிவசுப்பரமணிய அய்யர்)

2, வடக்கு ராமலிங்க முதலி அக்ரஹாரம்

**மாயூரம், தஞ்சை ஜில்லா.**